உள்ளவாறு தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் பெறுமதி ரூபா 12,075,000 அலுவலக உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் வருடாந்த பெறுமானத் தேய்வு வீதம் 10% முதல் 20% வரை மாற்றமடைந்ததன் காரணமாக தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் பயன்படு ஆயுட்காலம் 10 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரை மாற்றப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 15 சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டிற்குரிய செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்தமையால் மிகை ரூபா 3,435,105 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 17,500 செலவிடப்பட்டு நுண்பாக அலைஅடுப்பொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதனை மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மிகை மற்றும் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கல்விசாரா பதவியணியினருக்கு 11 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 117,189 ஆன விடுமுறை தினக்கொடுப்பனவு கல்விசாரா மேலதிக நேரம் (84208) செலவினத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக விடுமுறை தினக்கொடுப்பனவு அப்பெறுானத்தால் குறைவாகவும் கல்விசாரா மேலதிக நேரம் அப்பெறுானத்தால் கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு செலவினம் ரூபா 505,923 ஆக இருந்த போதிலும், இச்செலவினம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாகவும் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் ரூபா 235,255 ஆக கணக்கீடு செய்த காரணத்தால் பாதுகாப்பு செலவினம் ரூபா 270,668 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதற்குரிய கணக்காண்டின் இறுதியில் காணப்பட்ட அட்டுறு செலவினம் ரூபா 127,612 ஆக இருந்த போதும் கணக்கில் அது ரூபா 143,056 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் உத்தியோகத்தர் அபிவிருத்தி செலவினத் தலைப்பிலிருந்து நிறுவகத்தின் சிரேஷ்ட பதிவாளர், கற்புலசெவிப்புல தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் கணனி உள்ளீட்டு உதவியாளர் ஆகிய உத்தியோகத்தர்களுக்கு Academy of financial studies நிறுவனத்தின் பதிவுக் கட்டணமாக ரூபா 26,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பின்னர் இக்கொடுப்பனவு செல்லுபடியற்றதாக்கப்பட்டிருந்த போதிலும் உரிய சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்கலைக்கழக ஊழியர் ஒருவரால் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மின்சார முறைமையினதும் மின்பிறப்பாக்கியினதும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2010 ஏப்ரல் 30 முதல் 2011 யூன் 02 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா 10,400 ஆன கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் அடங்கியுள்ள ஆண்டிற்குரிய ரூபா 4,000 செலவினம் திருத்தம் மற்றும் நவீனமயப்படுத்தல் செலவினம், செலவினத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படாமல் பத்திரிகை மற்றும் சஞ்சிகை செலவினத் தலைப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டிற்குரியதாக ரூபா 6,400 ஆன செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்படாத காரணத்தால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 05 செலவினத் தலைப்புகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 209,718 கூட்டுத்தொகையான செலவினங்கள் வேறு செலவின விடயத் தலைப்பு 3 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 2012 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட பாடநெறிக் கட்டணம் ரூபா 13,726,309 ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய அறவிடப்பட வேண்டிய மாணவர் பாடநெறிக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2010 இறுதி அரையாண்டிற்குரிய மின்பிறப்பாக்கியை சேவை செய்வதற்கான ரூபா 3,920 செலவினம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) 3411 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் கல்விசாரா ஓய்வூதியச் சம்பள பணிக்கொடை ரூபா 953,290 ஆக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், கல்விப் பிரிவின் ஓய்வூதியச் சம்பள பணிக்கொடை ரூபா 297,550 பெறுமதியினை கல்விசார் ஓய்வூதியச் சம்பள பணிக்கொடை கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் கல்விசாரா (84214) பணிக்கொடை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2010 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 59,363 ஆன பாதுகாப்புச் செலவினம் மீளாய்வாண்டின் பாதுகாப்பு செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதனை சீராக்குவதற்காக நாட்குறிப்பு பதிவு மூலம்

ரூபா 96,647 ஒதுக்கக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பாதுகாப்பு சேவைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் பாதுகாப்பு செலவினம் ரூபா 37,284 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய நானாவித வருமானம் ரூபா 136,350 இற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஃ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் அரச மானியங்களிலிருந்தான கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,112,788 ஆன சொத்துக்களுக்காக ரூபா 153,296 பெறுமானத் தேய்வு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(க்) இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் ஐந்தொகை திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய உருப்படிகள் நடைமுறைப்பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 10 கல்வி குழுக்களுக்குரிய குறுகிய கால செயலமர்வுகள் மற்றும் பாடநெறி வருமானங்களிலிருந்து 5% ஆன ரூபா 2,045,600 ஆன கல்விச் குழுக் கட்டணம் நிறுவகத்தின் வருமானமாக கணக்கீடு செய்யாமல் நடைமுறைப்பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) குறுகிய கால பாடநெறிகளுக்காக முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய இருந்த ரூபா 915,000 ஆன வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாக கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டது.

(கா) குறுகிய கால பாடநெறி வருமானத்திலிருந்து 10% நிர்வாகக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 197,712 நிர்வாகக் கட்டணமாக அறவிடப்படாமல் இருந்ததுடன், கிடைக்க வேண்டிய வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கெ) உழைக்கும் போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் பட்டோலையின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட வரி ரூபா 582,184 ஆக இருந்ததுடன் கணக்கின் பிரகாரம் காசாக செலுத்தப்பட்ட அளவு ரூபா 420,327 ஆக இருந்தமையால் மேலும் செலுத்த வேண்டிய அளவு ரூபா 161,856 ஆக இருந்ததுடன், செலுத்த வேண்டிய அளவு ரூபா 147,288 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால், செலுத்த வேண்டிய வரி ரூபா 14,569 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

குறுகிய கால பாடநெறிகளுக்குரித்தாக கூட்டிணைத்தல் கட்டணம் உழைக்கப்படுகின்ற வருமானத்திலிருந்து 10% ஆக இருந்த போதும், மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட குறுகிய கால பாடநெறிகளுக்கான கூட்டிணைப்பு படிகளாக ரூபா 154,818 செலவினத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன், குறுகிய கால பாடநெறிகளுக்கான பேரேட்டின் பிரகாரம் ஆண்டில் கிடைத்த வருமானத்திலிருந்து உரிய கல்விக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய 5% ஆன ரூபா 28,361 கட்டணத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| 13 (2) உப பிரிவு | 2001 முதல் 2009 வரையான 09 ஆண்டுகளுக்கு அறவிடப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 967,284 ஆக இருந்த போதும் அதற்காக கணக்குகளில் ரூபா 376,944 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் குறை நிதி ஏற்பாடு ரூபா 590,340 ஆக இருந்தது. இக்காலப்பகுதிக்காக ரூபா 184,369 மட்டும் செலுத்தப்பட்டிருந்ததால் ரூபா 782,915 ஆன நிலுவை கணக்காய்வுக் கட்டணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |

i. 371(2) ஆம் பந்தி

i. துணைக்கட்டுநிதி பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே வழங்கப்பட முடியுமான போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 173,550 ஆன துணைக் கட்டுநிதி பதவி நிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 14 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன.

ii. 12 சந்தர்ப்பங்களில் ரூபா 491,000 கூட்டுத்தொகையான துணைக்கட்டுநிதி உரிய செயற்பாடு நிறைவுபெற்ற 07 நாட்கள் முதல் 09 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

ii. 371(4) ஆம் பந்தி

10 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 607,000 கூட்டுத்தொகையான துணைக்கட்டுநிதி தேவைப்பாட்டை மிகைத்து பெற்றுக் கொண்டமையால் ரூபா 238,906 சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது பெற்றுக்கொண்ட முற்பணத்தில் 39% ஆக இருந்தது.

(இ) <u>சுற்றறிக்கை</u>

i. 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை

எரிபொருள் நுகர்வு தொடர்பாக முறையான பரிசோதனையொன்று நடாத்தப்படாமையால் 58-3872 ஆம் இலக்க வாகனம் 2011 சனவரி முதல் திசெம்பர் வரை ஒரு லீற்றர் எரிபொருளுக்கு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூரத்தின் அளவு 6.0 முதல் 10.8 கிலோமீற்றர் வரையிலும் 301-6318 ஆம் இலக்க வாகனம் ஒரு லீற்றர் எரிபொருளுக்கு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூரத்தின் அளவு 7.25 முதல் 12.9 கிலோ மீற்றர் வரையான வீச்சில் காணப்பட்டன.

ii. 1994 யூன் 14 ஆம் திகதிய 95(02) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் 2003 சனவரி 29 ஆம் திகதிய பீஈ/174/1-2003 ஆம் இலக்க

குறுகிய கால பாடநெறி கூட்டிணைத்தல் நடவடிக்கைகளுக்ுரிய கொடுப்பனவிற்காக அமைச்சரவை அல்லது பொது நிர்வாக அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய 19 சந்தர்ப்பங்களில் அங்கீகாரம் இல்லாமல் பல்கலைக்கழகத்தின் பதவியணியினருக்காக

| | | |
|---|---|---|
| | நிதி அமைச்சின் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது ரூபா 923,850 படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவை<br>---------------------------------------------<br>பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பந்தி | மாதாந்த மேலதிக நேரக் கொடுப்பனவு மாதாந்த திரட்டிய சம்பளத்தின் 35% இற்கு மேற்படக் கூடாத போதிலும் இரண்டு ஊழியர்களுக்கு அந்த எல்லையை மிகைத்து ரூபா 136,852 மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | முகாமைத்துவ உள்ளகக் கட்டளை<br>----------------------------------------------<br>விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வழிகாட்டியின் 13.7 ஆம் பந்தி | ஆண்டொன்றிற்கு 6 தடவை பணிப்பாளர் சபைக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும், 04 கல்விக் குழுக்களுக்குரித்தாக மீளாய்வாண்டில் 3-5 மற்றும் 1-4 என்ற வகையில் நடாத்தப்பட்டிருந்தது. |

### 2.2.6 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 யூன் 07 ஆம் திகதிய 6/2010 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்துவதற்காக பெற்றோல் மோட்டார் வண்டியொன்றுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 12 வீதம் மைல் கட்டணம் செலுத்தப்பட முடியுமான போதிலும், அதற்கு முரணாக 74 ஆம் இலக்க முகாமைத்துவ சபை தீர்மானத்தின் மூலம் ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 25 வீதம் கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 147,318 கூட்டுத் தொகையான கொடுப்பனவுகள் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1990 பெப்ரவரி 06 ஆம் திகதிய 422 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தில் கடமை புரிவதற்காக பல்கலைக்கழகத்தின் பதவியணியினருக்கு கொடுப்பனவு மேற்கொள்ள முடியாத போதிலும், அதற்கு முரணாக விஞ்ஞான பீடத்தின் நூலகருக்கு, நிறுவகத்தின் நூலகத்தில் கடமைக்காக ரூபா 57,900 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு விடுமுறை

தினமொன்றில் சேவையில் ஈடுபட நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதும் நிறுவகத்தின் இலத்திரனியல் பொறியியலாளருக்கு அவரின் வழமையான கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு வார இறுதியிலும் சேவை புரிந்தமைக்காக முறையான அங்கீகாரமின்றி ரூபா 125,083 விடுமுறை தினக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 1978 மார்ச் 10 ஆம் திகதிய பீஈ/1/174/11(ஆ) இலக்கமுடைய பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு முரணாக இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித்தேர்ச்சிக்காக உரித்தற்ற 04 உத்தியோகத்தர்களுக்கு 1997 முதல் 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 233,470 ஆன கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

(உ) 2003 யூலை 18 ஆம் திகதிய பீடி/ஐஎன்எஸ்/சீஎல்யூஎஸ்/078 இலக்கமுடைய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு நிறுவகத்தின் பங்களிப்புத் தொகையை கணக்கிடும் போது கல்விசார் கொடுப்பனவையும் சேர்த்து கணக்கிடப்பட்டதால் 1998 முதல் 2011 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 440,842 மற்றும் ரூபா 88,168 அளவிலான பங்களிப்புத்தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதில் தலைவரின் UGC/HR/2/3/37 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் இளைப்பாறிய ஊழியர் ஒருவர் முகவர் அடிப்படையில் சேர்க்கப்பட்டு ரூபா 83,610 படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) நிறுவகத்திற்கு வர்ணம் பூசுவதற்காக மதிப்பீடு நிதிஏற்பாடு இல்லாமல் ரூபா 865,606 செலவிடப்பட்டிருந்தது.

### 2.2.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 02 ஆம் பிரிவிற்கு முரணாக நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் முறையான நியமனம் ஒன்றில்லாமல் குறுகியகால பாடநெறி இணைப்பாளர் பதவியில் கடமை புரிந்தமைக்காக 2005 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக சம்பளமாக ரூபா 4,913,086 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேவையிலீடுபட்டுள்ள விரிவுரையாளர்கள் மற்றும் ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரத்திலேயே நிறுவகத்தில் சேவை புரிந்தமைக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,218,748 படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2010 யூன் 07 ஆம் திகதிய 6/2010 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெற்றோல் மோட்டார் வண்டியொன்றுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 12 வீதம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், முறையான அடிப்படையொன்று இல்லாமல் குறுகிய பாடநெறிகளுக்களில் பங்குபற்றிய விரிவுரையாளர்களுக்கு 11 சந்தர்ப்பங்களில் ரூபா 106,500 போக்குவரத்து படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 7,500 வீதம் அறவிடப்படுவதுடன், 2000 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உரிய செலவினத்தை மேற்கொண்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 2,290,125 ஆக இருந்தது.

## 3 நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்வதற்கு முன்னர் ரூபா 5,159,531 ஆன மிகையொன்று காணப்பட்டது. ரூபா 19,187,072 ஆன அரசாங்க மானியத்தினை கணக்கிடப்பட்டதன் பின் அம்மிகை ரூபா 24,343,603 வரை அதிகரித்திருந்தது. அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முன்னர் ரூபா 934,518 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், ரூபா 14,000,000 ஆன அரசாங்க மானியத்தை கணக்கிடப்பட்டதன் பின்னர் அப்பற்றாக்குறை ரூபா 13,065,482 ஆன மிகையொன்றாக மாறியிருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,309,387 பெறுமதியான நிலையான சொத்துக்கள் குறித்த 19 செயற்திட்டங்கள் முடிவடைந்திருந்த போதும் அச்சொத்துக்களை நிறுவகத்திற்குப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கட்டளைகளின் 17(2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு முரணாகவும் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானமொன்றும் இல்லாமலும் பேராதனை பல்கலைக் கழகத்தின் PURSE ஆய்வு நடவடிக்கைகளுக்காக ரூபா 50,000 பணம் விசேட பங்களிப்பாக, கல்வி ஆய்வு செலவினத் தலைப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

33 வெளிவாரி ஆய்வுச் செயற்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 4,246,057 கூட்டுத்தொகையான மானியங்கள் 2004 முதல் 2011 வரையான காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 பயன்படுத்தப்படாத /குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 50,000 பெறுமதியான CPTH – 7657 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் ஆண்டின் போது 05 லீற்றர் எரிபொருள் மட்டும் பயன்படுத்தப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததன் காரணமாக ஆண்டின் போது போதியளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 செப்தம்பர் 28 ஆம் திகதிய UGC/HR/2/3/37 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதில் தலைவரின் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி அமைய ஊழியர்களுக்காக சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ள முடியாத போதிலும், பயிலுனர் மற்றும் முகவர் அடிப்படையில் 16 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2011 ஆம் ஆண்டிற்காக அமையச் சம்பளமாக ரூபா 514,454 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக் கோவையின் III அத்தியாயத்தின் 1.2.4 இன் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரம் இல்லாமல் 2011 சனவரி 22 ஆம் திகதிய 91.05 ஆம் இலக்க முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழக சேவையிலிருந்து இளைப்பாறிய ஊழியர் ஒருவருக்கு 2011 பெப்ரவரி மாதத்திலிருந்து 03 மாதங்களுக்காக மாதாந்தம் ரூபா 22,000 வீதம் ரூபா 66,000 முகவர் அடிப்படையில் சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக் கோவையின் III அத்தியாயத்தின் 1.2.4 இன் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரம் இல்லாமலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பந்திக்கு முரணாகவும் 2011 பெப்ரவரி 27 ஆம் திகதியிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவருக்காக 06 மாதங்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதிக்காக அவருக்குச் சம்பளமாக ரூபா 118,830 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 9.2 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக மனித வளத் திட்டமொன்று திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2003 திசெம்பர் 19 ஆம் திகதிய பீஈடி/19 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 ஊழியர் பணிக்கொடைக்காக நிதிஏற்பாட்டிற்காக நிதியமொன்றைத் தாபித்தல்

ஊழியர் பணிக்கொடை நிதியத்தில் ரூபா 2,812,975 ஆன பணத்தை செயற்திறனான முதலீடு ஒன்றில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்காமல் நிறுவகத்தின் பொது நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்திட்டம் நாளதுவரையாக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு தொடர்புபடுத்தப்பட வேண்டிய போதிலும், 2010 முதல் 2012 ஆண்டிற்கான கூட்டுத்திட்டம் அதன்பிரகாரம் நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 9,375,784 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தப் பாதீடு கூட்டுத் திட்டத்தின் பிரகாரம் நீண்டகால நோக்கத்தை நிறைவேற்றும் நோக்கிலும் ஆண்டின் ஆரம்பத்தின் போது நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டும் கருவியாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், 07 செலவின விடயங்களுக்குரிய ரூபா 2,116,184 ஆன குறை ஒதுக்கீடும் 16 செலவின விடயங்களுக்குரித்தாக ரூபா 19,899,247 ஆன மிகை ஒதுக்கீடும் அவதானிக்கப்பட்டதுடன், பாதீட்டில் உள்ளடக்கப்படாத 6 செலவின விடயங்களுக்காக ரூபா 649,404 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 1,331,000 ஆன 03 செலவின விடயங்களில் நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 4,572,717 கூட்டுத்தொகையான 06 வரவு விடயங்களுக்கு குறை வருமான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 1,525,526 கூட்டுத்தொகையான 02 வரவு விடயங்களுக்காக மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன், ரூபா 1,533,000 கூட்டுத்தொகையான 2 வரவு விடயங்களுக்குரிய வருமானம் உழைக்கப்படாமல் இருந்தமையால் பாதீடு சிறந்த நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

## 6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் பணிப்பாளருக்கு அவ்வப்போது அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) செயலமர்வுகள் மற்றும் குறுகிய கால பாடநெறிகளை நடாத்துதல்
(ஈ) முற்பணக் கொடுப்பனவு
(உ) ஆவணங்களின் பராமரிப்பு
(ஊ) உள்ளகக் கட்டுப்பாடு
(எ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஏ.யூ.தஸநாயக்க)
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான நிறுவகத்தின் பதில்

2.2.1 (அ) இது தற்போது சரிசெய்யப்பட்டு திருத்திய கணக்குகள் தொகுதியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது சரிசெய்யப்பட்ட திருத்திய கணக்குகள் தொகுதியில் காட்டப்பட்டுள்ளது.

2.2.2 இந்த தளபாடங்கள் பொருத்திகள் என்பன பத்து ஆண்டுகளுக்கு (10) மேல் பழமையானதால் உரிய மாற்றல்களால் திரட்டிய தேய்மானங்களுக்கு தாக்கம் ஏற்படுவதில்லை. எனினும் கணக்கீட்டு கொள்கைகளில் உரிய வித்தியாசம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2.2.3. (அ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(இ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஈ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(உ) தற்போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(எ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஏ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஐ) இந்தப் பெறுமானங்கள் மிகவும் குறைந்த பெறுமதிகளைக் கொண்டிருப்பதால் முன்னைய ஆண்டிற்காக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை

(ஒ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஓ) கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஔ) இது குறுகிய கால பாடநெறிகளுடன் தொடர்புடையதாக இருப்பதுடன், நாம் குறுகிய கால பாடநெறிகள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதால் சீராக்கம் தேவைப்படவில்லை. எவ்வாறாயினும் குறுகிய கால பாடநெறிகள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஃ) பெறுமானத் தேய்வை அடிப்படையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(க்) இப்பணம் எமது நிறுவனத்தின் வருமானம் அல்ல. அவை கல்விக் குழுக்களுக்குரிய பணமாகும். அவ்வாறு கோரும் எத்தகைய சந்தர்ப்பத்திலும் வழங்க வேண்டியிருப்பதால் நடைமுறைப் பொறுப்பில் காண்பிக்கப்படவில்லை.

(க) இது குறுகிய கால பாடநெறிகளுடன் தொடர்புடையதாக இருப்பதுடன், நாம் குறுகிய கால பாடநெறிகள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதால் சீராக்கம் தேவைப்படவில்லை.

(கா) இது குறுகிய கால பாடநெறிகளுடன் தொடர்புடையதாக இருப்பதுடன், நாம் குறுகிய கால பாடநெறிகள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதால் சீராக்கம் தேவைப்படவில்லை.

(கி) நிறுவனம் சரியாக கத்தகை செலுத்தியிருந்ததுடன்,இதனுடன் உள்ள இணைப்பை கவனத்திற் கொள்ளவும் (பின்னிணைப்பு 01)

2.2.4 இது குறுகிய கால பாடநெறிகளுடன் தொடர்புடையதாக இருப்பதுடன், நாம் குறுகிய கால பாடநெறிகள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதால் சீராக்கம் தேவைப்படவில்லை.

2.2.5 (அ) நாம் சரியாக கணக்காய்வுக் கட்டணத்தை அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நிலுவைப் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) எதிர்வரும் காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

i), ii)இ iii) எதிர்காலத்தில் இது தொடர்பாக எமது கவனம் செலுத்தப்படும்.

(இ) சொல்லப்பட்ட வாகனங்களில் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக முறையான பரிசோதனையொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

58-3872 ஆம் இலக்க வாகனத்தின் மீளாய்வாண்டிற்குரிய ஓட்ட அறிக்கை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு எரிபொருள் பயன்பாடு ஆகக் குறைந்ததாக காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் நட்சத்திரக் குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது. அங்கே குறுகிய கால பாடநெறிகளுக்கு சமுகமளித்த மாணவர்களை இஹல ஹந்தனை விடுதிக்கு கூட்டிச் செலுத்தும் சந்தர்ப்பத்தில் மலைப் பிரதேசங்களில் ஓட்டத்தில் ஈடுபட நேர்ந்ததால் இவ்வாறு கூடுதலாக எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(பின்னிணைப்பு 03)

301-6348 இது தொடர்பாக காண்பிக்கப்பட்ட அடட்டவணையில் உள்ளதன் பிரகாரம் ஒரு நட்சத்திரக் குறியீட்டால் காட்டப்பட்டுள்ள பிரயாணங்களில் ொழும்பிலிருந்து வந்த போக்குவரத்து நெரிசல் நிலைமைகளில் 5 மணித்தியாளங்களுக்கு கூடிய நேரம் எடுக்கப்பட்டிருந்ததால் எரிபொருள் பயன்பாடு இவ்வாறு அதிகரித்திருந்ததுடன், இரண்டு நட்சத்திரக் குறியீட்டால் காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் 03 மணித்தியாளங்களுக்கு குறைந்த காலப்பகுதியில் கொழும்பிலிருந்து வரும் போது ஆகக்கூடிய எரிபொருள் வினைத்திறன் ஒன்று காண்பிக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 04)

ii. இது தொடர்பாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) நிலவும் கடமைப்பாடு தேவையினால் இதனை தவிர்க்க முடியாததாக இருப்பதாலும் இதற்காக விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) குறித்த ஆண்டில் 04 மாதங்களுக்கு மேல் காணப்பட்ட கல்விசார் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படடும்.

2.2.6 அ) இது தொடர்பாக விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) விஞ்ஞான பீடத்தின் நூலகர் எமது நிறுவகத்தின் ஊழியர் ஒருவராக இல்லாமல் இருந்ததுடன்,அவரால் எமது நிறுவகத்திற்கு வழங்கும் சேவைக்காக எம்மால் இவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

இ) இவ்வாறு கடமை புரிவதற்கு நிறுவனத் தலைவரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 05)

ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊ) எமது நிறுவகத்திற்குரித்தாக 03 தொழிலாளர் பதவிகள் காணப்படுவதுடன், 02 ஊழியர்கள் அதன் கீழ் சேவை புரிந்து வருகின்றனர். அதில் ஒருவர் இளைப்பாறுவதற்கு ஓராண்டிற்கு முன்னரே இப்பதவிக்காக ஒருவரைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், 03 சந்தர்ப்பங்களிலும் எந்த நபரும் நேர்முகப் பரீட்சையில் சித்தியடையவில்லை. ஆகையால் அவ்வெற்றிடம் பூர்த்தி செய்யப்படும் வரையிலும் சேர்க்கப்பட்ட நபர் பயிற்சி பெறும் வரையிலும் இளைப்பாறிய ஊழியரை பணிப்பொறுப்பு அடிப்படையில் முகாமை சபை அங்கீகாரத்தின் கீழ் 06 மாதங்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எ) இதற்காக 2011 பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 06)

2.2.7 அ) பேராசிரியர் திருமதி என்.சீ.பண்டார 1998 யூலை 17 ஆம் திகதி முதல் இதுவரை விஞ்ஞானப் பட்டப்படிப்பு நிறுவகத்தில் சேவை புரிந்து வந்தார். வர் சேவைக்குச் சேர்ந்து முதல் 2 ஆண்டுகளில் 1998 யூன் 17 ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் இரண்டாம் தர த்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக சேவை புரிந்துள்ளார். அவர் விஞ்ஞானப் பட்டப்படிப்பு நிறுவகத்தின் பதவியணியில் காணப்படும் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கே சேர்க்கப்பட்டிருந்தார். விஞ்ஞானப் பட்டப்படிப்பு நிறுவகத்தில் உள்ள உத்தியோகத்தர் குழுமத்திற்கு குறுகிய கால பாடநெறி

இணைப்பாளர் பதவியொன்று காணப்படவில்லை. ஆதலால் அவ்வாறான பதவிக்காக சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. 2005 இலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு அவ்வாறான சம்பளமொன்று வழங்கப்படாமல் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்குரிய சம்பளமே செலுத்தப்பட்டதுடன், வேறு ஏதேனுமொரு கொடுப்பனவல்ல. (பின்னிணைப்பு 07 A மற்றும் 07 B)

ஆ) நிறுவகத்தின் அத்தியவசிய சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களினதும் இரசாயன ஆய்வுகூட ஊழியர்களினதும் சேவை இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அவ்வாறான சேவையொன்று பெற்றுக்கொள்ளப்படவில்லையெனின் நிறுவகத்தினை தொடர்ந்து இயங்குவதற்கு முடியாமல் போகும். இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரடன் கலந்துரையாடப் பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக எழுத்துமூலம் வேண்டுகோள் விடப்படும்.

இ) இதற்காக விசேட அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈ) காட்டப்பட்டுள்ள தகவல் சரியானதாகும்.

3.1 நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தொகுதியில் காணப்படும் நிதிப் பெறுபேறுகளின் பிரகாரம் இதன் கீழ் காட்டப்பட்டுள்ள பெறுபேறுகள் வேறுபடலாம்.

4.1 அ) இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) எமது நிறுவகத்தின் ஆய்வுப் பெறுபேறுகள் இந்த தொடரில் சமர்ப்பிக்கப்படுவதால் உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.2 இப்பணத்தை உரிய நிறுவனத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.3 இந்த மோட்டார் சைக்கிள் நன்கொடையாக கிடைத்ததாகும். அதனைப் பயன்படுத்தக்கூடிய ஒருவர் நிறுவகத்திடம் காணப்படவில்லை. அவ்வாறு வெளிக்கள மோட்டார் சைக்கிள் (Field bicycle) ஆதலால் ஓட்டுவதற்கு விசேட அனுபவம் அவசியமாகும்.

4.4 அ) இதன் கீழ் காட்டப்பட்டுள்ள மாணவர்கள் 13 என திருத்தப்பட வேண்டும். திரு. கருணாதாச மற்றும் திருமதி அலஹகோன் ஆகியோர் பணிப்பொறுப்பு அடிப்படையில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்ததுடன், திரு.கருணாதாச அவர்களின் பெயர் இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய 13 பேரும்

இளைஞர் சேவை நிறுவனத்தால் எமது நிறுவகத்திற்கு 06 மாத பயிற்சிக்கு அனுப்பப்பட்ட மாணவர்களாக இருந்ததுடன், அவர்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 08/2012 மற்றும் 23.04.2012 பிரகாரம் படிகள் வழங்கப்பட்டன.)

ஆ) இந்த ஆட்சேர்த்தலானது சம்பளமற்ற விடுமுறையில் பிரசவ விடுமுறை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் ஒருவரின் வெற்றிடத்திற்காக 03 மாத குறுகிய காலப்பகுதிக்கு முகாமைச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நியமனமாகும். தற்போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இ) எமது நிறுவகத்திற்குரிய 03 தொழிலாளர் பதவிகள் காணப்படுவதுடன், இரண்டு ஊழியர்கள் அதன் கீழ் சேவை புரிந்து வருகின்றனர். அதில் ஒருவர் இளைப்பாறுவதற்கு ஓராண்டிற்கு முன்னரே இப்பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், 03 சந்தர்ப்பங்களிலும் எந்த நபரும் நேர்முகப் பரீட்சையில் சித்தியடையவில்லை. ஆகையால் அவ்வெற்றிடம் பூர்த்தி செய்யப்படும் வரையிலும் சேர்க்கப்பட்ட நபர் பயிற்சி பெறும் வரையிலும் இளைப்பாறிய ஊழியரை பணிப்பொறுப்பு அடிப்படையில் முகாமை சபை அங்கீகாரத்தின் கீழ் 06 மாதங்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தார். எனினும் கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈ) எதிர்வரும் காலங்களில் இது தொடர்பில் எமது உரிய கவனம் செலுத்தப்படும்.

உ) எதிர்வரும் காலங்களில் இது தொடர்பில் எமது உரிய கவனம் செலுத்தப்படும்.

4.5 எதிர்காலத்தில் அனைத்து மேலதிக பணமும் முதலீடுகளில் ஈடுபடுத்தப்படும்.

5.1 இவ்வாண்டிலேயே இதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5.2 நிதிஏற்பாட்டுத் திட்டமொன்று எம்மால் தயாரிக்கப்பட்டுள்ளது.(பின்னிணைப்பு 08)

5.3 அ) எதிர்வரும் காலங்களில் இதற்காக கண்டிப்பாக உரிய கவனம் செலுத்தப்படும்.

ஆ) எதிர்வரும் காலங்களில் இதற்காக கண்டிப்பாக உரிய கவனம் செலுத்தப்படும்.

6. நிறுவகத்தால் இது தொடர்பாக கண்டிப்பாக கவனம் செலுத்தப்படும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No. | சீஎல்/கேடி/ஜே/ பிஜிஐஎஸ்/2012/13 | ඔබේ අංකය / உமது இல / Your No. | |
| දිනය / திகதி / Date | 2013 சனவரி 28 | | |

பணிப்பாளர்,

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம்

**விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களின்தும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க இலங்கை அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் 21 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) உப பிரிவு மற்றும் III ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவனப் பணிப்பாளருக்கு 2012 யூலை 17 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாகும்.

306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 / 034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஐந்தொகை திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய உருப்படியொன்று நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 10 பணிப்பாளர் சபைகளுக்குரிய குறுகியகால செயலமர்வுகள் மற்றும் பாடநெறி வருமானத்திலிருந்து 5% ஆன ரூபா 2,045,600 பணிப்பாளர் சபைக் கட்டணம் நிறுவகத்தின் வருமானமாக கணக்கீடு செய்யாமல் நடைமுறைபொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான சொத்துக்கள் முறையாக வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்படாமையால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 12,075,000 பெறுமதியான தளபாடங்களும் மற்றும் பொருத்திகளும் அலுவலக உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அதன் வருடாந்த பெறுமானத்தேய்வு வீதம் 10% முதல் 20% வரை வேறுபட்டிருந்தது. இதன் பிரகாரம் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் பயன்படு ஆயுட்காலமும் 10 ஆண்டுகளிலிருந்து 05 வரை வேறுபட்டிருந்தன.

(இ) அரச மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,112,788 ஆன நிலையான சொத்துக்களுக்காக ரூபா 153,296 பெறுமானத் தேய்வு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரிய 2012 பெப்ரவரி 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் தொடர்பாக 2012 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வழங்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதி வரைவு அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் சீராக்கப்பட்டு திருத்திய கணக்குகள் 2012 ஆகஸ்ட் 28 ஆம் திகதி கணக்காய்விற்காக வழங்கப்பட்டிருந்தது. அக்கணக்குகளில் மேலும் கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 1,230,121 ஆன செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன், 03 சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 27,106 செலவினம் முற்பணக் கணக்கு கொடுப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக சீராக்கக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 321,964 பெறுமதியான நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், நாட்குறிப்பு பதிவு மூலம் அப்பெறுமதி மீண்டும் ஒருமுறை குறித்த சொத்துக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் அப்பெறுமானத்தால் சொத்துக்களின் பெறுமதியும் கடன்கொடுத்தோர் பெறுமதியும் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய நானாவித வருமானம் ரூபா 136,350 இற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குறுகிய கால பாடநெறிகளுக்காக முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய இருந்த ரூபா 915,000 ஆன வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய 10% நிர்வாகக் கட்டணமான ரூபா 197,712 கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) குறுகிய கால பாடநெறிகளுக்குரித்தாக உழைக்கப்படுகின்ற வருமானத்திலிருந்து 10% கூட்டிணைத்தல் கட்டணமாக கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட குறுகிய கால பாடநெறிகளுக்காக கூட்டிணைப்பு படிகளாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 154,818 ஆன செலவினத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே குறுகிய கால பாடநெறிகளுக்காக ஆண்டில் கிடைத்த வருமானத்திலிருந்து உரிய கல்விக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய 5% ஆன ரூபா 28,361 கட்டணத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| 13 (2) உப பிரிவு | 2001 முதல் 2009 வரையான 09 ஆண்டுகளுக்கு அறவிடப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 967,284 ஆக இருந்த போதும் அதற்காக கணக்குகளில் ரூபா 376,944 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பற்றாக்குறை நிதிஏற்பாடு ரூபா 590,340 ஆக இருந்தது. அந்தக் காலப்பகுதிக்காக செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா 184,369 ஆக மட்டுமாக இருந்ததால் ரூபா 782,915 ஆன நிலுவை கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| 371(2) ஆம் பந்தி | i. குறித்த பணிக்கான துணைக்கட்டுநிதி பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே வழங்கப்பட முடியுமான போதிலும், ரூபா 173,550 ஆன துணைக் கட்டுநிதி பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர் களுக்கு 14 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன. |
| | ii 12 சந்தர்ப்பங்களில் ரூபா 491,000 கூட்டுத்தொகையான துணைக்கட்டுநிதி உரிய செயற்பாடு நிறைவுபெற்ற 07 நாட்கள் முதல் 09 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| சுற்றறிக்கை | |
| i. 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | எரிபொருள் நுகர்வு தொடர்பாக முறையான பரிசோதனையொன்று நடாத்தப்படாமையால் 58-3872 மற்றும் 301-6318 ஆம் இலக்க இரண்டு வாகனங்களும் 2011 ஆம் ஆண்டில் ஒரு லீற்றர் எரிபொருளுக்கு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூரத்தின் அளவு முறையே 6.0 முதல் 10.8 கிலோமீற்றர் வரையிலும் 7.25 முதல் 12.9 வரையான வீச்சினைக் கொண்டிருந்தன. |
| ii. 1994 யூன் 14 ஆம் திகதிய 95(02) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் 2003 சனவரி 29 ஆம் திகதிய பீஈ/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | குறுகியகால பாடநெறி கூட்டிணைப்பு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகளுக்காக அமைச்சரவை அல்லது பொது நிர்வாக அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதும், 19 சந்தர்ப்பங்களுக்கு அவ்வாறான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ரூபா 923,850 படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஈ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவை<br>---<br>பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பந்தி | மாதாந்த மேலதிக நேரக் கொடுப்பனவு மாதாந்த திரட்டிய சம்பளத்தின் 35% இனை விட மேற்படக் கூடாத போதும் இரண்டு ஊழியர்களுக்கு அந்த எல்லையை மிகைத்து ரூபா 136,852 மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தன. |

3 நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்வதற்கு முன்னர் ரூபா 6,950,122 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டது. ரூபா 19,184,072 ஆன அரசாங்க மானியத்தினை கணக்கிடப்பட்டதன் பின் அப்பற்றாக்குறை ரூபா 12,233,950 மிகையாக மாறியிருந்தது. அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முன்னர் ரூபா 934,518 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், ரூபா 14,000,000 ஆன அரசாங்க மானியத்தை கணக்கிடப்பட்டதன் பின்னர் அப்பற்றாக்குறை ரூபா 13,065,482 ஆன மிகையொன்றாக மாறியிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ரூபா 831,532 ஆன குறைவிற்கு மாணவர் பாடநெறிக் கட்டணம் குறைந்தமை விசேடமாக தாக்கமளித்திருந்தது

3.2 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 யூன் 07 ஆம் திகதிய 9/2010 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்துவதற்காக பெற்றோல் வாகனமொன்றுக்கு, ஒரு கிலோமீற்றருக்காக ரூபா 12 வீதம் மைல் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 74 ஆம் முகாமைத்துவ சபை தீர்மானத்தின் மூலம் வருகை தரும் விரிவுரையாளர்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 25 வீதம் கொடுப்பனவு செய்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 147,318 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேற்குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக முறையான அடிப்படையொன்று இல்லாமல் குறுகிய பாடநெறிகளுக்காக சமூகமளித்த விரிவுரையாளர்களுக்கு 11 சந்தர்ப்பங்களில் ரூபா 106,500 போக்குவரத்து படிகள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 1990 பெப்ரவரி 06 ஆம் திகதிய 422 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தில் கடமை புரிவதற்காக பல்கலைக்கழகத்தின் பதவியணியினருக்கு கொடுப்பனவு மேற்கொள்ள முடியாத போதிலும், அதற்கு முரணாக விஞ்ஞான பீடத்தின் நூலகருக்கு நிறுவகத்தின் நூலகத்தில் கடமை புரிந்தமைக்காக ரூபா 57,900 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு விடுமுறை தினமொன்றில் சேவையில் ஈடுபட நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதும் நிறுவகத்தின் இலத்திரனியல் பொறியியலாளருக்கு அவரின் வழமையான கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு வார இறுதியிலும் சேவை புரிந்தமைக்காக முறையான அங்கீகாரமின்றி ரூபா 125,083 விடுமுறை தினக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 1978 மார்ச் 10 ஆம் திகதிய பீஈ/1/174/11(ஆ) இலக்கமுடைய பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு முரணாக இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித்தேர்ச்சிக்காக உரித்தற்ற 04 உத்தியோகத்தர்களுக்கு 1997 முதல் 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 233,470 ஆன கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

(உ) 2003 யூலை 18 ஆம் திகதிய பீடி/ஜஎன்எஸ்/சீஎல்யூஎஸ்/078 இலக்கமுடைய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு நிறுவகத்தின் பங்களிப்புத் தொகையை கணக்கிடும் போது கல்விசார் கொடுப்பனவையும் சேர்த்து கணக்கிடப்பட்டமையால் 1998 முதல் 2011 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 440,842 மற்றும் ரூபா 88,168 அளவிலான பங்களிப்புத்தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் III ஆம் அத்தியாயத்தின் 02 ஆம் பிரிவிற்கு முரணாக நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் முறையான நியமனம் ஒன்றில்லாது 2005 முதல் 2011 ஆம் ஆண்டு வரை குறுகியகால பாடநெறி இணைப்பாளர் பதவியில் கடமை புரிந்து வந்தார்.

(ஆ) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேவையிலீடுபட்டுள்ள விரிவுரையாளர்கள் மற்றும் 97 ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரத்தில் விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் சேவை புரிந்தமைக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,218,748 படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் பாடநெறிகளுக்குரிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 7,500 வீதம் அறவிடப்படுவதுடன், 2000 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அதன் மூலம் எஞ்சியிருந்த ரூபா 2,290,125 தொகை வைப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

4 செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 19 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,309,387 பெறுமதியான நிலையான சொத்துக்கள் குறித்த செயற்திட்டம் முடிவடைந்திருந்த போதும் அச்சொத்துக்களை நிறுவகத்திற்குப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கட்டளைகளின் 17(2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு முரணாகவும் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானமொன்றும் இல்லாமலும் பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆய்வு நடவடிக்கைகளுக்காக ரூபா 50,000 பணம் விசேட பங்களிப்பாக, கல்வி ஆய்வு செலவினத் தலைப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு

33 வெளிவாரி ஆய்வுச் செயற்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 4,246,057 கூட்டுத்தொகையான மானியங்கள் 2004 முதல் 2011 வரையான காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.3 பயன்படுத்தப்படாத /குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 50,000 பெறுமதியான மோட்டார் சைக்கிலொன்று ஆண்டின் போது 05 லீற்றர் எரிபொருள் மட்டும் பயன்படுத்தப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததன் காரணமாக ஆண்டின் போது போதியளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.4 பதவியணியினர் நிர்வாகம்

2006 செப்தம்பர் 28 ஆம் திகதிய UGC/HR/2/3/37 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதில் தலைவரின் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி அமைய ஊழியர்களுக்காக சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ள முடியாத போதிலும், பயிலுனர் மற்றும் முகவர் அடிப்படையில் 16 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2011 ஆம் ஆண்டிற்காக அமையச் சம்பளமாக ரூபா 514,454 செலுத்தப்பட்டிருந்ததுடன், இளைப்பாறிய ஊழியர் ஒருவர் முகவர் அடிப்படையில் சேர்க்கப்பட்டு ரூபா 83,610 படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4.5 ஊழியர் பணிக்கொடைக்காக நிதிஏற்பாட்டிற்காக நிதியமொன்றைத் தாபித்தல்

ஊழியர் பணிக்கொடை நிதியத்தில் ரூபா 2,812,975 ஆன மீதிகளை செயற்திறனான முதலீடு ஒன்றில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்காமல் நிறுவகத்தின் பொது நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

5.1 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், 2010 முதல் 2012 ஆண்டிற்கான கூட்டுத்திட்டம் அதன் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 9,375,784 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம், பிரதான கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 06 வரவு விடயங்களுக்குரிய ரூபா 4,572,717 ஆன குறை ஒதுக்கீடும், 02 வரவு விடயங்களுக்குரிய ரூபா 1,525,526 இற்கு மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன், 02 வரவு விடயங்களுக்குரிய ரூபா 1,533,000 ஆன எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்திற்கு வர்ணம் பூசுவதற்காக வருடாந்த பாதீட்டில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமல் இருந்த போதும் அதற்காக ரூபா 865,606 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் பணிப்பாளருக்கு அவ்வப்போது அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) செயலமர்வுகள் மற்றும் குறுகிய காலப்பாடநெறிகளை நடாத்துதல்
(ஈ) முற்பணக் கொடுப்பனவு
(உ) ஆவணங்களின் பராமரிப்பு
(ஊ) உள்ளகக் கட்டுப்பாடு
(எ) பாதீட்டுக் கட்டுப்பாடு

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி